**அகம் 5 புறம் 5**

*புதுமைப் பயணம்*

**அகம் 1**

**(அன்பு)**

<u>சாதுவும் சவரத் தொழிலாளியும்:</u>

ஒருசமயம் மெக்கா நகரில் பிச்சைக்காரர் தோற்றத்திலிருந்த சாது ஒருவர் சலூனுக்குச் சென்றார். நகரின் மிகப்பெரிய பணக்காரர் ஒருவருக்குச் சவரம் செய்துகொண்டிருந்த சலூன் காரர். ஆனால் இந்த சாதுவைப் பார்த்ததுடன் அதைப் பாதியிலேயே விட்டுவிட்டு வந்து இவருக்கு சவரம் செய்தது மட்டுமல்லாது யாசகமும் கொடுத்தனுப்பினார். இதனால் மனநிறைவுற்ற சாது தனக்குள் ஒரு உறுதி எடுத்துக்கொண்டார். அடுத்ததாக தனக்கு யாசகமாக வரும் சிறந்த பொருளை அந்த சலூன்காரருக்குக் கொடுக்க வேண்டுமென்பதே அந்த உறுதி. அதுபோலவே மெக்கா வந்த பணக்கார யாத்ரீகர் ஒருவர் ஒரு பை நிறைய தங்க நாணயங்களை இவருக்கு வழங்கினார். சாதுவும் அந்த நாணயங்களை சலூன்காரரிடம் சென்று கொடுத்தார். அவர்தம் அன்பான சேவைக்கு தனது பரிசு இது என்றும் கூறினார். காரணம் அறிந்த சலூன்காரரோ மிகவும் கோபமடைந்து என்ன மனிதர் நீர் என்னுடைய உண்மையான அன்பிற்கு பரிசு கொடுக்க வந்திருக்கின்றீரே என்று கடிந்து கொண்டார். மேலும் தான் எந்த ஒரு பிரதிபலனும் எதிர்பார்த்து தனது அன்பான சேவையை அவருக்கு அளிக்கவில்லை என்றும் கூறினார்.

மேலே கூறப்பட்டுள்ள கதை பற்றி உங்கள் கருத்து(பின்வரும் மூன்று விடைகளில் உங்களுக்கு மிகவும் பொருத்தமாகத் தோன்றுவதைத் தேர்ந்தெடுக்கவும்)

1. பிரதிபலன் எதிர்பார்த்துக் கொடுக்கப்படும் எந்தப் பரிசும் லஞ்சத்திற்குச் சமம்
2. உண்மையான அன்பு மற்றும் கனிவிற்கு எந்த அளவு பணமும் ஈடாகாது
3. அன்பான செயலுக்கு பிரதியுபகாரமாக இன்னொரு அன்பான செயல்தான் அமையும்

கதையிலிருந்து அனுபவப்பாடம்

1. சலூன்காரர் நிலையிலிருந்தால் நான் என்ன செய்வேன்
2. நான் வளர்ந்த பிறகு எனது வாக்கிற்காக வேட்பாளர் பணம் கொடுத்தால் என்ன செய்வேன்
3. உங்களுக்குத் தெரிந்த யாராவது ஒருவருக்கு இப்படிப்பட்ட அனுபவம் ஏற்பட்டு இருந்து உங்களுக்குத் தெரிந்திருந்தால் பகிர்ந்து கொள்ளுங்கள்.

கதையிலிருந்து நாம் தெரிவது

1. அன்பு என்றால் என்ன?
2. மற்றவர் என்னிடம் காட்டும் அன்பை எப்படி எதிர்கொள்வேன்
3. எனது அன்பிற்கு பிரதியுபகாரமாக என்ன எதிர்பார்ப்பேன்

ஆக அன்பைப் பற்றி தெளிந்தார்கள் மாணவர்கள். அடுத்ததாக மாணவர்கள் தமக்குள் சொல்லிப்பார்க்கவேண்டியது

1. உலகிலுள்ள அனைவரும் அன்பு செலுத்த மற்றும் அனைத்து உயிர்களும் அன்பு பெறத் தகுதியானவரே(வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய வள்ளலார் சிறு உயிர்களிடத்தும் நாம் அன்பு செலுத்துவதை வலியுறுத்தினார்)
2. அன்பே கடவுள்
3. அன்பானது இன்சொற்களை நம்மிடமிருந்து வெளிப்படுத்தும்
4. அன்பானது அக்கறை, கனிவு, கருணை போன்ற பண்புநலன்களை நம்மிடமிருந்து வெளிப்படுத்தும்
5. அன்பு புரிதலையும், பகிர்தலையும் மேம்படுத்தும்
6. அன்பு நம்பிக்கையையும் நம்பகத்தன்மையையும் நம்மிடம் அதிகரிக்கும்
7. நாம் செலுத்தும் அன்பானது சகஉயிர்களுக்கு நன்மையையே செய்யும்
8. அன்பு பரஸ்பரம் ஒற்றுமையை அதிகரிக்கும்
9. அன்பு இன, மொழி, ஜாதி, நிறம் போன்ற வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டது
10. அன்பு மேம்பட்டால் அமைதி நிலவும்

**(பின் வரும் இப்பாடலை அனைவரும் சேர்ந்து பாடுவோம்)**
<u>பாடல்</u>

அன்பினால் அவனியை நிறைப்போம்

அகிலம் தன்னில் கோபத்தை வேரறுப்போம்

நேசம், அக்கறை, கனிவுதன்னைப் பெருக்குவோம்

சுயநலம் விலக்குவோம் போர் மேகங்கள் விரட்டிடுவோம்

அன்பை அமைதியின் காரணியாக்குவோம்

காலம் வரும் காத்திரு என்பர்

காலத்திற்காகக் காத்திராது அன்பெனும் கடமையாற்றுவோம்

அவணியையே அன்பின் துணைகொண்டு அமைதிப்பூங்காவாக்குவோம்.

**பாடல் கூறும் கருத்து**

________________________________________

________________________________________

________________________________________

பாடல் கூறும் கருத்துக்களைப் படங்களாகத் தொகுத்து வரைக
(தேவை சார்ட் பேப்பர், ஸ்கெட்ச் பேனா)

**அன்பு அனைத்தும் தரும்:**

ஒரு வீட்டில் அம்மா, அப்பா மற்றும் மகன் இருந்தனர். வீட்டின் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. போய் திறந்து பார்த்தால் மூன்றுபேர் வீட்டிற்கு வெளியே நின்று கொண்டிருந்தனர். அவர்கள் பெயர்கள் முறையே அன்புராஜ், ஆரோக்கியராஜ் மற்றும் செல்வராஜ். அவர்கள் எங்களில் யாராவது ஒருவரைத் தேர்ந்தெடுக்கலாம் அந்த நபர் உங்களுடனேயே தங்குவார். அப்பாவோ இந்த வீட்டில் ஆரோக்கியம் தான் அதிகம் தேவை. ஆரோக்கியம் இருந்தால் அனைத்தும் வந்துவிடும் என்று ஆரோக்கியராஜை அவர்களுடன் தங்குமாறு கூறினார். அம்மாவோ செல்வம் இருந்தால் போதும். அனைத்தையும் வாங்கிவிடலாம் என்று செல்வராஜை அவர்களுடன் தங்குமாறு கூறினார். பையனோ நீங்கள் இருவரும் வேலைக்குப் போய்விடுகின்றீர்கள். என்னுடன் அன்பாகப் பேசுவதற்கு யாரும் இல்லை. ஆகையால் அன்புராஜை நம்முடன் தங்குமாறு கூறலாம் என்றான். பெற்றோரும் சரி என்று கூறிவிட்டனர். அன்புராஜ் வந்த இரண்டுநாட்களுக்குப் பிறகு ஒருநாள் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. கதவைத் திறந்து பார்த்தால் ஆரோக்கியராஜ், செல்வராஜ் நின்றுகொண்டிருந்தனர். அன்புராஜ் எங்களுடன் இருந்தபொழுது மிகவும் அன்பாகப் பழகிவிட்டார். அவரைப் பிரிந்து இருக்கமுடியவில்லை. நாங்களும் அவருடனேயே இருந்து விடுகின்றோம் என்றனர். ஆக அன்பு வந்ததால் ஆரோக்கியம் மட்டுமல்ல செல்வமும் சேர்ந்து வந்து விட்டன. ஆக நாமும் அனைவருடனும் அன்பாகப் பழகுவோம். நாம் எதிர்பார்த்தது, எதிர்பாராதது என்று அனைத்துமே நமக்குக் கிடைக்கப்பெறும். இங்கு மனிதர்களாக நாம் பார்த்தது அன்பு, செல்வம் மற்றும் ஆரோக்கியம் ஆகும்.

**அன்பும் உணவும் ஓர் ஒப்பீடு:**

மானுடனுக்கு உடல், உயிர் இரண்டும் உண்டென்பர். உயிர் போய்விட்டால் உடம்பிருந்தும் எவ்வித பிரயோசனமும் இல்லை. அதுபோல நாம் அன்றாடம் சாப்பிடும் உணவிற்கும் உடம்பு உயிர் என இரண்டு பகுதிகள் உண்டா? நம் தம்பியண்ணா கூறுகின்றார். உணவின் திட மற்றும் திரவ நிலை அதன் உடல் பகுதி மற்றும் அதன் வாசனை, சுவை மற்றும் நிறம் ஆகியன அதன் உயிர் பகுதியாகும். உணவின் உயிர்ச் சத்து போய்விடுவது என்பது மேலே கூறிய வாசனை, சுவை மற்றும் நிறத்தில் ஏற்படும் மாற்றத்தை வைத்து அறியலாம். உடல் பகுதியான திட, திரவ நிலைகளில் மாற்றம் ஏதும் ஏற்படுவதில்லை. இப்படிப்பட்ட உணவை அன்பிற்கு ஓர் ஒப்பீடு செய்யலாம். நாம் அன்பு செலுத்தும் ஒரு நபரைப் பார்த்தால் மகிழ்ச்சி, அவர் குரல் கேட்டால் ஆனந்தம், அவர் இருப்பே ஒரு பரவசம். அவர் ரத்தம், சதையாக நமது முன் தோன்றுவது அவர் தம் உடல் பகுதி. இப்படி அன்பை உணவிற்கு ஒப்பிடலாம். அன்பைக் கொடுப்பதும் உணவைப் பரிமாறுவது போலத்தான். ஒருசமயம் ராமு என்பவர் தனது டாபர்மன் நாய்க்கு நல்லது என்று காட் லிவர் ஆயில் கொடுத்து வந்தார். அதை நாய்க்கு ஊட்டுவது மிகப் பெரிய போராட்டத்திற்குப் பின் தான் நடக்கும். நாயின் தலையை தன் கால்களுக்கு இடையில் வைத்துக் கொண்டு ஆயிலை தேக்கரண்டியை வைத்துத் திணிப்பது வழக்கம். ஒரு நாள் தேக்கரண்டி கீழே விழுந்து ஆயிலும் தரையில் கொட்டிவிட்டது. நாயோ துள்ளிக்குதித்துச் சென்று அந்த ஆயிலை நக்கியதோடு மட்டுமல்லாமல் தேக்கரண்டியை நக்குவதற்கும் ஓடி வந்தது. இதிலிருந்து தெரிந்து கொள்வது என்னவென்றால் நாயானது உணவை மறுக்க வில்லை அதைக்கொடுத்த முறையைத் தான் மறுத்தது. அன்பும் அப்படியே. அன்பின் பேரால் தனது கட்டுப்பாட்டிலேயே வைத்துக் கொள்ள முயன்றால் நேசிக்கப்படுபவர் அதை ரசிக்கமாட்டார். அவர் எதிர்பார்ப்பதுமே சுதந்திரமான சூழலிலே நேசிக்கப்படுவதைத் தான்.

பெற்றோர்கள் அன்பின் போர்வையிலே குழந்தைகளுக்கு சுதந்திரமே வழங்காமல் வளர்த்தால் அந்தக் குழந்தைகள் வாழ்க்கைச் சூழல்களில் தனித்து முடிவெடுக்க சிரமப் படுவர்.

மேலும் அன்பு என்பது மனதிற்குள் இருந்தால் மட்டும் போதாது. அதை சரியான முறையில் வெளிப்படுத்த வேண்டும். உதாரணத்திற்கு உங்களிடம் ஒரு கேள்வி. உங்களுக்குப் பின்வருவனவற்றில் பிடித்தன எவை: பூ, பழம் மற்றும் விதை. பூவின் நிறத்திற்காகவும் வாசனைக்காகவும் பழத்தின் நிறத்திற்காகவும், சுவைக்காகவும் நாம் நேசிப்பது வழக்கம். இப்படிப்பட்ட பூ, பழம் வருவது விதையிலிருந்துதான் என்றாலும் விதைகள் நேசிக்கப்படுவதில்லை. ஆக அன்பை வெளிப்படுத்துங்கள். அதுதான் நேசத்தைப் பரவலாக்கும்.

**அன்பிற்குமுண்டோ அடைக்குந்தாழ்:**

நாம் நேசிப்பவர்கள் சந்தோஷத்தைப் பார்த்து சந்தோஷத்தின் மிகுதியால் கண்ணில் ஒரு துளி நீர் தெறித்தால் அல்லது அவர்தம் துன்பத்தைப் பார்த்து நாமும் கண்ணீர் சிந்தினால் அதுதான் உண்மையான அன்பாகும். வள்ளுவனும் அழகாக

அன்பிற்குமுண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும். (71)

அன்பை எந்தத் தாழ்ப்பாளும் அடைத்து விடமுடியாது. அன்புக்குரியவர் துன்புற்றால் அன்பு செலுத்துபவர் கண்களிலும் கண்ணீர் தானாக வழியும் என்பது தான் வள்ளுவனின் கூற்று.

**அன்பு உணர்வா? செயலா?**

அன்பை உணவிற்கு ஒப்பிட்டோம். அடுத்த கேள்வி அன்பு என்பது உணர்வா அல்லது செயலா? ஒருசமயம் விவாகரத்து பெறும் முனைப்பில் இருந்த தம்பதியர் நண்பர்களின் ஆலோசனையின் பேரில் திரு ஸ்டீபன் ஆர் கோவி என்ற பயிற்சியாளரைச் சென்று பார்த்தனர். வந்த காரணத்தைக் கேட்ட அவரோ நீங்கள் திரும்பவும் ஒருவரை ஒருவர் நேசியுங்கள் என்றார். அதற்கு அந்த ஆண் இந்த பேயையா? என்றும் அந்தப் பெண் இந்த நாயையா? என்றும் அவசரமாக வினவினர், மேலும் ஒருவரை ஒருவர் நேசிக்கும் உணர்வே இல்லை என்றும் கூறினர். அதற்கு அவர் இருவரிடமும் இந்தக் கேள்வியைக் கேட்டார். அன்பு உணர்வா அல்லது செயலா என்று. இருவரும் ஒருமித்த குரலில் உணர்வுதான் என்றனர். கோவி அவர்களும் கணவனைப் பார்த்து ஒருவேளை நீங்கள் சொல்லும் உணர்வு இந்தப் பெண்ணின் மேல் இருந்தால் என்னென்ன செய்வீர்கள் என்று கேட்டார். அதற்குக் கணவனும் அவளை அப்படிப்பார்த்துக் கொள்வேன், இப்படிப் பார்த்துக் கொள்வேன், அவளுக்கு வேண்டியனவற்றைப் பார்த்துப் பார்த்துச் செய்வேன் என்று அடுக்கிக்கொண்டே சென்றார். கோவி அவர்களும் இப்பொழுது சொன்னதையெல்லாம் செய்யுங்கள் நீங்கள் கூறிய உணர்வு தானே வரும் என்றார்.

தந்தையை, தாயை நான் மிகவும் நேசிப்பேன் என வாய் வார்த்தைகளால் கூறுவது எந்த பிரயோசனத்தையும் தராது. ஒரு சமயம் எனது வகுப்பில் இருந்த ஒரு மாணவி இந்த உலகத்திலேயே தன் தாயைத் தான் அதிகமாக நேசிப்பதாகக் கூறினாள். இது எலெக்ட்ரா காம்ளெக்ஸ் சித்தாந்தத்திற்கு விரோதமானது. ஒரு பெண் குழந்தைக்கு தாயை விடத் தகப்பனைத் தான் அதிகம் பிடிக்கும். அவளது துரதிருஷ்டம் அன்று மாலை நான் அவள் வீட்டிற்கு செல்ல வேண்டியிருந்தது. என்னைப் பார்த்த அவள் தாயோ, உன் தந்தையோ வெளியே கிளம்பிக் கொண்டிருக்கின்றார். வெளியே ஒரு இடத்திலும் சாப்பிட மாட்டார் என்பதால் கொலைப் பட்டினியாக வீட்டிற்குத் திரும்புவார். எனக்கோ காய்ச்சலாக இருக்கிறது. நீ உன் தந்தைக்கு இரண்டு தோசைகள் வார்த்துக் கொடுத்தால் போதும். அதுவரை நான் சாரிடம் பேசிக்கொண்டிருக்கிறேன் என்று கூறினார். தாயின் இந்த வேண்டுதலுக்கு அந்தப் பெண் என்ன சொல்லியிருப்பாள்? இந்த உலகத்திலேயே தாயை மட்டுமே அதிகம் நேசிப்பதாகக்கூறிய அந்தப் பெண் தன் தாயின் வேண்டுகோளுக்குச் செவிசாய்க்காமல் என்னிடம் பேச வந்து விட்டாள். இங்கு அவளது நேசம் உணர்வா? செயலா? வெறும் உணர்வாக மட்டும் இருந்தால் என்ன பயன்? அது செயலாக மாறினால் தான் சக மனிதருக்கு உதவியாக இருக்கும். தானே முன்வந்து செயலாற்றும் பக்குவம் உங்களுக்கு இருந்தால் நேசம் செயலாகும். அதை விடுத்து வேறுமாதிரி இருந்தீர்களேயானால் அன்பு வெறும் உணர்வு நிலையிலேயே தங்கிப் போகும்.

**அன்பே ஆதியும் அந்தமும்:**

இதுநடந்தது ஒரு அமெரிக்கச் சேரியில். ஒரு சமூகவியலாளர் அந்தப் பகுதியில் வசித்த 200 மாணவர்களை ஆராய்ச்சி செய்து அவர்கள் வாழ்க்கையில் முன்னேறுவதற்குச் சாத்தியமே இல்லை என்று அறிக்கை அளித்தார். இது நடந்து 20 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த அறிக்கையைப் பார்த்த இன்னொரு சமூகவியலாளர் இந்த அறிக்கை கூறிய விபரம் சரிதானா என்று திரும்பவும ஆராய முடிவெடுத்தார். அந்த 200 மாணவர்களில் 10 பேர் இறந்து விட்டனர், 15 பேர் அந்தப் பகுதியை விட்டு வேறுபகுதிக்குக் குடிமாறிவிட்டனர். மீதமிருந்த 175 பேரையும் ஒவ்வொருவராகச் சென்று சந்தித்தார். ஆச்சரியமான விஷயம் என்னவென்றால் இவர்கள் முன்னேறுவதற்கு வாய்ப்பேதும் இல்லை என்ற அறிக்கைக்கு மாறாக ஒவ்வொரு மாணவனும் மருத்துவராக, பொறியியல் வல்லுனராக, வக்கீலாக, ஆசிரியராக, தொழில் முனைவோராக என்று பல் வேறு நிலைகளில் வளர்ந்திருந்தனர். அனைவரும் இதெற்கெல்லாம் காரணம் ஒரு ஆசிரியை என்றனர். அந்த ஆசிரியையைச் சென்று நேரில் பார்த்து

நம்பிக்கையே இல்லாத நிலையிலிருந்து அருமையான நிலைக்கு அந்த மாணவர்கள் முன்னேறியுள்ளனரே, அதற்கு என்ன தான் செய்தீர்கள் என்று கேட்டார். அந்த ஆசிரியையோ நான் ஒன்றுமே செய்யவில்லை. அந்த மாணவர்களை நேசித்தேன், அவ்வளவுதான் என்றார். இது தெரியாததால் தான் பெற்றோர்கள் குழந்தைகள் மீது அன்பு செலுத்துவதை விட்டு மற்ற தேவையில்லாத அனைத்து காரியங்களையும் செய்து கொண்டிருக்கின்றனர். அன்பு ஆனைமலையையே அசைத்துவிடும். அனைவரிடமும் அன்பு செலுத்துங்கள்.

**அன்பே சிவம்:**

ஒரு சினிமாப்பாடலை அன்பின் வழியே ஆய்வு செய்வோம்.

யார் யார் சிவம்? நீ நான் சிவம்,
வாழ்வே தவம், அன்பே சிவம்,
ஆத்திகம் பேசும் அடியார்க்கெல்லாம் சிவமே அன்பாகும்,
நாத்திகம் பேசும் நல்லவர்க்கெல்லாம் அன்பே சிவமாகும்,
அன்பே சிவம், அன்பே சிவம், என்றும்,
அன்பே சிவம், அன்பே சிவம், எங்கும்,
அன்பே சிவம், அன்பே சிவம், என்றும்,
அன்பே சிவம், அன்பே சிவம், எங்கும்,
இதயம் என்பது சதைதான் என்றால் எரிதழல் தின்றுவிடும்
அன்பின் கருவி இதயம் என்றால் சாவை வென்றுவிடும்,
யார் யார் சிவம்? நீ நான் சிவம்,
அன்பின் பாதை சேர்ந்தவனுக்கு முடிவே இல்லையடா,
மனதின் நீளம் எதுவோ அதுவே வாழ்வின் நீளமடா

பாடல் கூறும் கருத்து:

அக்கறை, கருணை, நேசம் என்ற ஒவ்வொரு செயலிலும் கடவுள் இருக்கிறார் என்பர். இந்த மூன்றையும் நாம் செய்யும்பொழுது நாம் கடவுளாகிறோம். ஆக நம்மைச் சுற்றி உள்ளவர்களின் நலனில் நாம் அக்கறை செலுத்தினால், அவர்களை நேசித்தால், அவர்கள் தேவைகளை கருணையோடு அணுகினால் அன்பின் வடிவங்களாகவே நாம் மாறிவிடுவோம்.

**நிறைவுரை**

அன்புதான் மானுட உறவுகளுக்கு ஆதாரம். பரஸ்பர உறவை மேம்படுத்தும் அருமையான காரணி. அன்பெனும் பண்புதான் எங்கோ யூகோஸ்லேவியாவில் பிறந்த பெண்ணை மதர் தெரஸாவாக நமக்கு அறிமுகப்படுத்தியது. புனிதர் பட்டமும் அவருக்குக் கிட்டியது. அன்புதான் மாணவர்களான நமது உறவு நிலைகளை மேம்படுத்தப் போகின்றது. அன்பெனும் மந்திரத்தால் கோபமே கோவித்துக் கொண்டு சென்று விடும். அதனால் தான் அன்பே சிவம் எனப் படமெடுத்தனர். அன்பு உச்சகட்டத் தேவையான அமைதியை நமது உலகிற்கு கொண்டுவரும். உலகமும் அமைதிப் பூங்கா எனப் பெயர் பெறும்.

வாழ்க அன்பு வளர்க அன்பு. ஆதலினால் அன்பு செய்வீர்.